*பிரஸார் பாரதி*
*அகில இந்திய வானொலி-சென்னை-4*
*03 08 2025 SUNDAY 12 40 PM*
*ஆகாஷவாணி - __செய்திகள்__*

***__தலைப்புச் செய்திகள்__***

1. உலகில் வேகமாக வளரும் பொருளாதார நாடுகளில் இந்தியா தொடர்ந்து மூன்றாவது இடத்தில் உள்ளதாக தகவல் ஒலிபரப்புத்துறை அமைச்சர் திரு. அஷ்வினி வைஷ்ணவ் கூறியுள்ளார்.

2. சுதந்திரப் போராட்ட வீரரான தீரன் சின்னமலை, சமுதாயத்திற்கு அளப்பரிய பணியாற்றியிருப்பதாக மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் புகழாரம் சூட்டியுள்ளார்.

3. உத்தரபிரதேசத்தில் ட்ரோன்களை சட்டவிரோதமாக பயன்படுத்துவோர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று அம்மாநில முதலமைச்சர் யோகி ஆதித்யநாத் எச்சரித்துள்ளார்.

4. யுக்ரைனின் 112 ட்ரோன்களை இடைமறித்து அழித்துள்ளதாக ரஷ்யா தெரிவித்துள்ளது.

5. கஜகஸ்தானில் நடைபெற்று வரும் சர்வதேச தடகளப் போட்டியின் நீளம் தாண்டுதல் பிரிவில் இந்தியாவின் முரளி ஸ்ரீ சங்கர் தங்கப்பதக்கம் வென்றார்.

>>>>>><<<<<<

உலகில் வேகமாக வளரும் பொருளாதார நாடுகளில் இந்தியா தொடர்ந்து மூன்றாவது இடத்தில் உள்ளதாக தகவல் ஒலிபரப்புத்துறை அமைச்சர் திரு. அஷ்வினி வைஷ்ணவ் கூறியுள்ளார்.

இதுதொடர்பாக சர்வதேச செலாவணி நிதியம் வெளியிட்டுள்ள அறிக்கையை தமது சமூகவலைதளத்தில் அவர் பகிர்ந்துள்ளார்.

இந்த அறிக்கையின் படி, 2024, 2025 மற்றும் 2026ஆம் ஆண்டுகளில் இந்தியா மூன்றாவது இடத்தில் உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

>>>>>><<<<<<

சுதந்திரப் போராட்ட வீரர் தீரன் சின்னமலையின் நினைவு தினம் இன்று கடைபிடிக்கப்படுகிறது.

*இந்நாளையொட்டி, சென்னை கிண்டியில் உள்ள அன்னாரது சிலை முன்பாக வைக்கப்பட்டிருந்த திருவுருவப் படத்திற்கு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் மற்றும் மாநில அமைச்சர்கள் மலர் தூவி மரியாதை செலுத்தினர்.*

*மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் மற்றும் பிஜேபி நிர்வாகிகளும் சென்னையில் உள்ள தீரன் சின்னமலை சிலைக்கு மாலை அணிவித்து, மரியாதை செலுத்தினர்.*

*பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய டாக்டர் எல். முருகன், தலைசிறந்த சுதந்திரப் போராட்ட வீரரான தீரன் சின்னமலை, சமுதாயத்திற்கு அளப்பரிய பணியாற்றியிருப்பதாக புகழாரம் சூட்டினார்.*

*(சவுண்ட் பைட் – எல். முருகன் 42 செகண்ட்ஸ்)*

*அஇஅதிமுக பொதுச் செயலாளர் திரு. எடப்பாடி பழனிசாமி, திருநெல்வேலியில் தீரன் சின்னமலை உருவப்படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தினார்.*

*சேலம் மாவட்டம். சங்ககிரி கோட்டையில் நடைபெற்ற நிகழ்ச்சியில், மாநில அமைச்சர் திரு. ராஜேந்திரன், மாவட்ட ஆட்சியர் உள்ளிட்டோர் தீரன் சின்னமலை உருவப்படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தினர்.*

*ஈரோடு மாவட்டம், ஓடாநிலையில் உள்ள அன்னாரது நினைவிடத்தில் உள்ள சிலைக்கு பிஜேபி மாநிலத்தலைவர் திரு. நயினார் நாகேந்திரன், தேசிய பொதுக்குழு உறுப்பினர் திரு. அண்ணாமலை உள்ளிட்டோர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.*

*>>>>>><<<<<<*

*உத்தரபிரதேசத்தில் ட்ரோன்களை சட்டவிரோதமாக பயன்படுத்தி, மக்களிடையே அச்சத்தை ஏற்படுத்துவோர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று அம்மாநில முதலமைச்சர் யோகி ஆதித்யநாத் எச்சரித்துள்ளார்.*

*இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், சட்டவிரோதமாக ட்ரோன்களை பயன்படுத்துவோர் குண்டர் தடுப்புச் சட்டம் மற்றும் தேசிய பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்படுவார்கள் என்று தெரிவித்துள்ளார்.*

*முன்அனுமதியின்றி ட்ரோன்களை பயன்படுத்த தடை விதிக்கப்பட்டிருப்பதை சுட்டிக்காட்டியுள்ள முதலமைச்சர், தொழில்நுட்பங்களை தவறாக பயன்படுத்துவதை மாநில அரசு ஒருபோதும் அனுமதிக்காது என்றும் குறிப்பிட்டுள்ளார்.*

*இந்த விவகாரத்தில் வதந்தியை பரப்புவோர் மீதும் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று யோகி ஆதித்யநாத் தெரிவித்துள்ளார்.*

*>>>>>><<<<<<*

*ஜம்மு கஷ்மீரின், குல்காம் மாவட்த்தில் பாதுகாப்புப் படையினர் தீவிரவாதிகளுக்கு எதிராக தொடர்ந்து மூன்றாவது நாளாக தேடுதல் வேட்டையில் ஈடுபட்டுள்ளனர்.*

*இம்மாவட்டத்தின் Akhal வனப்பகுதியில் ராணுவம், மத்திய ரிசர்வ் காவல்படை மற்றும் ஜம்மு கஷ்மீர் காவல்துறையினர் கூட்டாக இந்த நடவடிக்கையை மேற்கொண்டுள்ளனர்.*

*கடந்த இரண்டு நாட்களில் இரண்டு தீவிரவாதிகள் கொல்லப்பட்டதுடன் ஒருவர் படுகாயமடைந்த நிலையில், தொடர்ந்து இப்பகுதியில், துப்பாக்கிச் சண்டை நடைபெற்று வருவதாக பாதுகாப்புப் படையினர் தெரிவித்தனர்.*

*>>>>>><<<<<<*

*ஜப்பானின் ஒஸாகா நகரில் நடைபெற்று வரும், சர்வதேச கண்காட்சியில் அமைக்கப்பட்டுள்ள இந்திய அரங்கை ஏராளமானோர் பார்வையிட்டு வருகின்றனர்.*

*பாரத் மண்டபம் என்ற பெயரில் அமைக்கப்பட்டுள்ள இந்த அரங்கில் இந்தியாவின் கலாச்சார பாரம்பரியம், விண்வெளி சாதனைகள் மற்றும் கைவினைப் பொருட்கள் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன.*

*சந்திரயான் மண்டலம் என்ற பெயரிலான விண்வெளிப் பிரிவில், இந்தியாவிலிருந்து அனுப்பப்பட்ட செயற்கைக்கோள்கள் மற்றும் சந்திரயான் உள்ளிட்ட விண்கலங்கள் இடம்பெற்றுள்ளன.*

*இதுதவிர, பார்வையாளர்களுகென யோகா குறித்த அமர்வும் நடத்தப்பட்டு வருவதாக ஜப்பானுக்கான இந்திய தூதரகம் தெரிவித்துள்ளது.*

*ஒரு மாவட்டம் – ஒரு உற்பத்திப் பொருள் பிரிவில், ஜம்மு கஷ்மீரின் வால்நட் மர சிற்பங்கள் மற்றும் ஒடிசாவின் Tarakashi கலைப் பொருட்ளும் இதில் இடம்பெற்றுள்ளன.*

*இந்த கண்காட்சி வரும் அக்டோபர் 13ஆம் தேதிவரை நடைபெறும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.*

*>>>>>><<<<<<*

*விவசாயிகளுக்கு உதவும் வகையில், பிரதமரின் விவசாயிகளுக்கான வருவாய் ஆதரவு திட்டத்தை மத்திய அரசு செயல்படுத்தி வருகிறது.*

*இத்திட்டத்தின் கீழ், 20வது தவணைத் தொகை விடுவிக்கப்பட்டுள்ள நிலையில், இது சாகுபடிக்கு உதவிகரமாக உள்ளது என்று தமிழகத்தின், பெரம்பலூர் மாவட்டத்தைச் சேர்ந்த விவசாயிகள் தெரிவித்தனர்.*

*(சவுண்ட் பைட் – விவசாயிகள் 40 செகண்ட்ஸ்)*

*>>>>>><<<<<<*

*அமர்நாத் புனித யாத்திரை இன்றுடன் நிறுத்தப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.*

*கடந்த மாதம் 3ஆம் தேதி தொடங்கிய இந்த யாத்திரை, ரக்சாபந்தன் தினமான வரும் 9ஆம் தேதி வரை நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது.*

*ஆனால், மோசமான வானிலை மற்றும் யாத்திரை செல்லும் பாதை சேதமடைந்ததன் காரணமாக, இந்த யாத்திரை முன்கூட்டியே முடித்துக் கொள்ளப்படுவதாக ஜம்மு கஷ்மீர் அரசு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.*

*>>>>>><<<<<<*

*யுக்ரைனின் 112 ட்ரோன்களை இடைமறித்து அழித்துள்ளதாக ரஷ்யா தெரிவித்துள்ளது.*

*கருங்கடல் மற்றும் Azov கடற்பகுதி உள்ளிட்ட ரஷ்யாவின் பல்வேறு பகுதிகளை நோக்கி, யுக்ரைன் நேற்றிரவு ஏவிய ட்ரோன்களை ரஷ்ய வான் பாதுகாப்பு பிரிவினர் அழித்துவிட்டதாக அந்நாட்டு பாதுகாப்பு அமைச்சகத்தை மேற்கோள் காட்டி செய்தி நிறுவனங்கள் தெரிவித்துள்ளன.*

*>>>>>><<<<<<*

*பாகிஸ்தானில் சட்டவிரோதமாக தங்கியுள்ள ஆப்கானிஸ்தானைச் சேர்ந்தவர்கள் உடனடியாக வெளியேற வேண்டும் என்று அந்நாட்டு அரசு உத்தரவிட்டுள்ளது.*

*கைபர் பக்துன்வா மாகாணத்தில் அவர்கள் பெற்ற அடையாள ஆவணம் ஜுன் 30ஆம் தேதியுடன் காலாவதி ஆகிவிட்டதால், ஆப்கானிஸ்தான் நாட்டைச் சேர்ந்தவர்கள் அவர்களின் சொந்த நாட்டுக்கு திரும்புமாறு பாகிஸ்தான் உள்துறை அமைச்சகம் அறிவுறுத்தியுள்ளது.*

*>>>>>><<<<<<*

*உத்தரபிரதேச மாநிலம், Gonda பகுதியில் இன்று நேரிட்ட சாலை விபத்தில் 11 பேர் உயிரிழந்தனர், 4 பேர் காயமடைந்தனர்.*

*பிரித்திவிநாத் ஆலயத்திற்கு பக்தர்கள் சென்ற வாகனம், கட்டுப்பாட்டை இழந்து, Rehra என்னுமிடத்தில் சரயு ஆற்றின் கால்வாயில் கவிழ்ந்ததில், இந்த விபத்து நேரிட்டதாக காவல்துறையினர் தெரிவித்துள்ளனர்.*

*உயிரிழந்தவர்களின் உடல்கள் மீட்கப்பட்டு, பிரேதப் பரிசோதனைக்காக அருகில் உள்ள மருத்துவமனைக்கு அனுப்பப்பட்டுள்ளதாகவும் காவல்துறையினர் கூறியுள்ளனர்.*

*இந்த விபத்து குறித்து ஆழ்ந்த இரங்கல் தெரிவித்துள்ள அம்மாநில முதலமைச்சர் யோகி ஆதித்யநாத், உயிரிழந்தோரின் குடும்பத்தினருக்கு தலா 5 லட்சம் ரூபாய் நிதியுதவி அளிக்கப்படும் என்றும் அறிவித்துள்ளார்.*

*>>>>>><<<<<<*

*ஈரான் வான் பகுதியில் விமானங்கள் பறக்க விதிக்கப்பட்டிருந்த அனைத்து கட்டுப்பாடுகளும் விலக்கிக் கொள்ளப்படுவதாக, அந்நாட்டு அரசு அறிவித்துள்ளது.*

*இஸ்ரேல் உடனான மோதல் காரணமாக கடந்த ஜுன் 26ஆம் தேதி முதல் கட்டுப்பாடு விதிக்கப்பட்டிருந்தது.*

*இந்நிலையில், அனைத்து உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு விமான சேவைகள் இன்று முதல் வழக்கம் போல் செயல்படும் என்று ஈரான் சிவில் விமான போக்குவரத்து அமைப்பு தெரிவித்துள்ளது.*

*டெஹ்ரான் சர்வதேச விமான நிலையம், முழுஅளவில் பயன்பாட்டிற்கு வந்துள்ளதாகவும் அந்த அமைப்பு கூறியுள்ளது.*

*>>>>>><<<<<<*

*கஜகஸ்தானில் நடைபெற்று வரும் சர்வதேச தடகளப் போட்டியின் நீளம் தாண்டுதல் பிரிவில் இந்தியாவின் முரளி ஸ்ரீ சங்கர் தங்கப்பதக்கம் வென்றார்.*

*அவர் 7 புள்ளி ஒன்பது நான்கு மீட்டர் தூரத்தை தாண்டி, இந்த சாதனையை படைத்துள்ளார்.*

*>>>>>><<<<<<*

*பிரேஸிலில் நடைபெற்று வரும் சர்வதேச டேபிள் டென்னிஸ் போட்டியின் கலப்பு இரட்டையர் பிரிவு இறுதியாட்டத்தில் இந்தியாவின் மனுஷ் ஷா – தியா சிட்டாலே இணை இன்று பங்கேற்கிறது.*

*>>>>>>END<<<<<<*